. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்
ஒரு விரல் புரட்சி செய்வோம்!
நம் உரிமையை நிலைநாட்டுவோம்!
-இது நமக்கான தேர்தல்-
தேர்தல் நாள் ஏப்ரல் 23

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 28.03.2026 • மலர் 04 • இதழ்: 86 • Edition : Nagercoil • 28.03.2026 • Vol : 04 • Issue : 86 • Page : 4 • Rs. 5/-

## நான் மற்றவர்களைப் போல அல்ல

# அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் தரமாட்டேன்

## சீமான் பேச்சு




சென்னை, மார்ச். 28

"நான் மற்றவர்களைப் போல அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் நான் தர மாட்டேன். அதையெல்லாம் நீங்களே வாங்கிக் கொள்ளும்படி வேலையை தருகிறேன்" என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கள்ளக்குறிச்சியில் பேசும் போது, "வலிமை மிக்க ஆயுதம் வாக்கு; ஒற்றை வாக்கைஉலகம்திரும்பிப் பார்க்க வைக்கும் வாக்காக மாற்ற முடியும். கருணாநிதி, ஜெயலலிதா, ஸ்டாலின், பழனிசாமி ஆட்சியை பார்த்துவிட்டீர்கள்; ஒருமுறை ஆட்சியை என்னிடம் தாருங்கள். நல்ல கல்வி, உலகத் தரம் வாய்ந்த மருத்துவம், தூய குடிநீரை இலவசமாக தருகிறேன்.

நான் ஆட்சிக்கு வந்த பிறகு மதுக்கடைகளை மூட முடியும், பாலியல் வன்கொடுமைகளை தடுத்திட முடியும், நீரை தேக்கி வைக்க முடியும். ஆனால் மறுபடியும் என்னால் மலைகளை, ஆற்று மணலை உருவாக்க முடியாது, ஏனென்றால் அது இயற்கையின் கொடை.

நான் மற்றவர்களைப் போல அண்டா, குண்டா, மிக்ஸி எல்லாம் நான் தர மாட்டேன். அதையெல்லாம் நீங்களே வாங்கிக் கொள்ளும்படி வேலையை தருகிறேன். அதற்கு சம்பளம் தருகிறேன். யார் கையையும் எதிர்பார்க்காமல் தன்மானத்தோடு வாழக்கூடிய தற்சார்பு வாழ்க்கையை உங்கள் பிள்ளையாகிய நான் தருவேன்.

இன்று ஒரு தொகுதிக்கு ரூ. 25 கோடி கொடுத்து, ஒருவருக்கு ரூ. 2000 கொடுக்கிறவன் தான் வேட்பாளர். அப்படி என்றால் ரூ.25 கோடி முதலீடு செய்கிறவன் லாபத் தேவைக்கு செய்கிறானா? மக்கள் சேவைக்கு செய்கிறானா? உங்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறவன், எப்படி உங்களுக்கு சேவை செய்வான் என்று எப்படி நம்புகிறீர்கள்? . கொஞ்சம் சிந்தித்து வாக்களியுங்கள்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## 60 ஆண்டுகால காங்கிரஸ் பயணம் முடிவு

# தவெகவில் இணைந்த 96 வயது மூத்த உறுப்பினர்



சென்னை, மார்ச். 28

காங்கிரஸ் கட்சியில் சுமார் 60 ஆண்டுகளாக உறுப்பினராக இருந்த மூத்த அரசியல்வாதி ஏ.பி. கமலம்மாள் (96), விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (தவெக) கட்சியில் இணைந்துள்ளார்.

2026 தமிழக சட்டசபை தேர்தலை முன்னிட்டு, தனது 60 ஆண்டுகால காங்கிரஸ் பயணத்தை முடித்துக்கொண்டு அவர் இந்த முடிவை எடுத்துள்ளார். சென்னை பனையூரில் உள்ள தவெக கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விஜய் முன்னிலையில் கமலம்மாள் கட்சியில் இணைந்தார்.

96 வயதான மூத்த அரசியல்வாதி புதிய கட்சியில் இணைந்தது அரசியல் வட்டாரத்தில் கவனத்தை ஈர்த்துள்ளது. முன்னதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட டி. செல்வம் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார்.

---

## தேஜ கூட்டணியின் ஆட்சி அமைந்தவுடன்

# அனைத்து "சார்"களும் சிறைக்குச் செல்வது உறுதி

### டிடிவி தினகரன் பேச்சு



சென்னை, மார்ச். 28

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் மீது மாணவி புகார் ஏற்கனவே தமிழகத்தை உலுக்கிய பாலியல் புகாரில் தொடர்புடைய அந்த "சார்" கைது செய்யப்படாததன் விளைவா ?

அண்ணா பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வரும் பேராசிரியர் ஒருவர், அப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வரும் மாணவியின் ஏழ்மையைப் பயன்படுத்திக் கடந்த மூன்று ஆண்டுகளாக பாலியல் ரீதியாகத் தன்னை துன்புறுத்தியதாக எழுந்திருக்கும் புகார் அங்கு பயிலும் ஒட்டுமொத்த மாணவிகளின் பாதுகாப்பை மீண்டும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

இதே அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவருக்கு நடைபெற்ற பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தில் தொடர்புடையதாகக் கூறப்படும் "சார்" இதுவரை கைது செய்யப்படாத நிலையில், தற்போதைய பாலியல் புகாரின் பின்னணியிலும் அதே "சார்" இருப்பாரோ ? என்ற சந்தேகம் அப்பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களின் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே, உலக அளவில் புகழ்பெற்ற அண்ணா பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் அமைந்திருக்கும் இந்த பாலியல் குற்றச்சாட்டு மீது விரிவான விசாரணை மேற்கொண்டு, பேராசிரியர் குற்றத்தில் ஈடுபட்டிருப்பது உறுதி செய்யப்பட்டால் அவர் மீது பாரபட்சமற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறையை வலியுறுத்தும் நேரத்தில், தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சி அமைந்தவுடன் பாலியல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான அனைத்து "சார்"களும் சிறைக்குச் செல்வது உறுதி என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

# அரசியல் கட்சிகள் கூட்டங்கள் நடத்த செயலி மூலம் அனுமதி பெறவேண்டும்

## சென்னை மாநகராட்சி தகவல்




சென்னை, மார்ச். 28

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள், பேரணி மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துதல், வாகனங்கள் மற்றும் ஒலிப்பெருக்கி பயன்படுத்துதல், தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் உள்ளிட்டவற்றிற்கு *Suvidha* என்ற செயலி மூலம் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அனுமதி பெறவேண்டும்.

மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தகவல்

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள், பேரணி மற்றும் தெருமுனைக் கூட்ட பிராசாரம் நடத்துதல், வாகனங்கள் மற்றும் ஒலிப்பெருக்கி பயன்படுத்துதல், தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் உள்ளிட்டவற்றிற்கு *Suvidha* என்ற செயலி மூலம் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் *(Returning Officers)* விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும். இத்தகைய விண்ணப்பங்கள் நிகழ்வு தொடங்குவதற்கு 48 மணிநேரத்திற்கு முன்பாக அளிக்கப் பட வேண்டும்.

வீடுவீடாகச் சென்று பிரசாரம் மேற்கொள்ளுதல் *(Door to door Canvass)*, ஹெலிகாப்டர் மற்றும் ஹெலிபாட் *(Helicopter and Helipad)* பயன்பாடு, தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் *(Temporary Party Office)*, ஒலிபெருக்கியுடன் கூட்டம் நடத்துதல் *(Hold Meeting and Loud Speaker)*, ஒலிபெருக்கியின்றி கூட்டம் நடத்துதல் *(Hold Meeting without Loud Speaker)*, ஒலிபெருக்கியுடன் தெருமுனைக் கூட்டம் நடத்துதல் *(Street Corner Meeting and Loud Speaker)*, ஒலிபெருக்கியுடன் ஊர்வலம் நடத்துதல் *(Take out Procession and Loud Speaker)*, பேரணி நடத்துதல் *(Rally)*, சாலைக் காட்சி *(Road Show)* மேற்கொள்ளுதல், விளம்பரப் பதாகைகள் மற்றும் கொடிகள் *(Display Banner and Flags)*, சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள் மற்றும் கம்பத்துடன் கூடிய விளம்பரப் பலகைகள் *(Poster, Hoarding and Unipole)*, வாகனங்கள் அனுமதி *(Vehicle Permission)*, உள் மாவட்டத்திற்குள் வாகனங்கள் அனுமதி *(Vehicle Permit (intra District))*, ஒலிபெருக்கியுடன்வாகன அனுமதி *(Vehicle with Loudspeaker Permit)*, நட்சத்திரப் பேச்சாளர்கள் மற்றும் கட்சிப் பொறுப்பாளர்களுக்கு வாகன அனுமதி *(Star campaigners and Party office bearers)* உள்ளிட்டவற்றிற்கு *Suvidha* செயலி மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் தொடர்பான கூட்டங்கள் மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதற்கு சென்னை பெருநகர காவல் ஆணையாளரால் ஏற்ற இடங்களாக தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு 112 இடங்கள், தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதற்கு 179 இடங்கள் என 291 இடங்கள் பரிந்துரை செய்யப்பட்டு, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட 291 இடங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்படும். இதர இடங்களில் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப் படமாட்டாது.அனுமதிவழங்கப்படும் இடங்களின் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பெறப்படும் இத்தகைய விண்ணப்பங்கள் காவல்துறை, போக்குவரத்துத் துறை, பொதுப்பணித்துறை, மின்சாரத் துறை, தீயணைப்புத் துறை உள்ளிட்ட தொடர்புடைய துறைகளுக்கு கருத்து மற்றும் தடையில்லாச் சான்றுக்காக அனுப்பப்படும்.

மேற்குறிப்பிட்ட துறைகளின் கருத்துக்கள் மற்றும் தடையின்மைச் சான்றுகளின் அடிப்படையில், தேர்தல் சட்ட விதிமுறைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரால் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட துறைகளிடம் இருந்து தடையின்மைச் சான்று கிடைக்காத பட்சத்தில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அதற்கான காரணங்களும் தேர்தல் நடத்தும் அலுவலரால் தெரிவிக்கப்படும்.

இந்த *Suvidha* செயலி மூலம் இதுவரை 816 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 408 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 134 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. மேலும், 274 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளது. எனவே, தேர்தல் விதிகளின்படி *Suvidha* செயலி மூலம் 48 மணிநேரத்திற்கு முன்னதாக விண்ணப்பங்களை அளித்து, சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து அனுமதி பெற்று தேர்தல் நடத்தை விதிகளை தவறாமல் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்கண்ட தகவலை மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---

# சோனியா காந்தியின் உடல்நிலையில் முன்னேற்றம்; விரைவில் வீடு திரும்புவார் டாக்டர்கள் தகவல்



புதுடெல்லி, மார்ச். 28

காங்கிரஸ்மூத்ததலைவரும்,அக்கட்சியின்நாடாளுமன்ற குழுதலைவருமானசோனியாகாந்தி,உடல்நிலைபாதிப்பு காரணமாக கடந்த 24ந்தேதி இரவு 10 மணியளவில் புதுடெல்லியில் உள்ள சர் கங்காராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு டாக்டர்கள் குழுவினர் அவருக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்த்தொற்று பாதிப்புகள் காரணமாக சோனியா காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவருக்கு ஆன்டிபயாட்டிக் மருந்துகள் கொடுக்கப்பட்டு வருவதாகவும் அவருக்கு சிகிச்சை அளித்து வரும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

சோனியா காந்தியின் உடலில் தீவிர பாதிப்புகள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அவரது உடல்நிலையில் தற்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும், அடுத்த ஓரிரு நாட்களில் சோனியா காந்தி மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீடு திரும்புவார் என்றும் டாக்டர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

2 வருடங்களாக தீண்டாமை சுவரை அகற்றக்கோரி போராட்டம்

# சங்கரலிங்கபுரம் கிராமமக்கள் தேர்தல் புறக்கணிப்பு போராட்டம்



விளாத்திகுளம் மார்ச் 28.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சங்கரலிங்கபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் 1920ம் ஆண்டு அப்பகுதி மக்கள் பயன்படுத்தி வந்த பாதையில் இருதரப்பினரிடையே நடைபெற்ற ஜாதி மோதல் காரணமாக, கிராமம் முழுவதும் இந்து மக்களாக இருந்த மக்கள், ஒரு தரப்பினர் பிரிந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாறி அப்பகுதியில் ஒரு கிறிஸ் தவசபை கட்டினர், அதனைத்தொடர்ந்துஎதிர்தரப்பினர்,கிறிஸ் தவசபை அருகே சிறிதாக கட்டப்பட்ட சுவர் நாளடைவில் அதை தீண்டாமை கல் சுவராக உயரமாக கட்டினர், அரசு நத்தம் புறம்போக்கில் கட்டப்பட்ட தீண்டாமை சுவரை அகற்றக்கோரியும், அக் கிராம ஆதிதிராவிட மக்கள் பலமுறை அரசுக்கு கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, தீண்டாமை சுவரை அகற்றக் கோரி இதுவரை அப்பகுதி மக்கள் கருப்புகொடி கட்டி போராட்டம், கடந்த இரண்டு ஆண்டுகளாக சுதந்திர தினவிழா, குடியரசு தினவிழா என எதையுமே ஆதிதிராவிடர் பகுதி மக்கள் கொண்டாடவில்லை, சுடுகாட்டில் போயி குடியேறும் போராட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் முற்றுகை போராட்டம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் போராட்டம் என பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தியும் அரசு இதுவரை எந்த செவியும் சாய்க்கவில்லை. ஓட்டுக்கு மட்டும் எங்களைத்தேடி வரும் அரசியல்வாதிகள் எங்களின் பிரச்சினைகளை கண்டு கொள்வதில்லை, ஓட்டுக்குமட்டும்தான்நாங்கள்தேவையா? மக்கள் பிரச்சனையை அரசியல்வாதிகளும் அரசு அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை எனவும், நாங்கள் பெற்ற பிள்ளைகளுக்கு சாதி சான்றிதழ் வாங்குவதற்கு, நாங்கள் இந்துவா? கிறிஸ்டினா? என வீட்டுக்கு வந்து போட்டோ பாக்க வராங்க, அப்படி இருக்கும் பொழுது அரசு நத்தம் புறம்போக்கு இடத்தை எவ்வாறு பட்டா போட்டு கொடுக்கலாம், எனவே பாதையை மறித்து கட்டப்பட்டுள்ளதீண்டாமை சுவரை அகற்ற கோரியும் பட்டாவை ரத்து செய்யக்கோரியும் தமிழக அரசுக்கும் தேர்தல் ஆணையத்துக்கும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்து கண்டன கோஷங்கள் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் கிராமம் முழுவதும் உள்ள வீட்டின் சுவற்றில் சுதந்திர இந்தியாவின் அவமான சின்னமாக சங்கிலிங்கபுரம் தீண்டாமை சுவரை அகற்றக் கோரி 2026 தேர்தல் புறக்கணிப்பு போராட்டம் என சுவர் ஒட்டிகள் ஒட்டப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பாசமுத்திரம் வனச்சரகம் மணிமுத்தாறு அணைப்பகுதியில்

# 540 கிலோ காலி மது பாட்டில்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள்

## தன்னார்வலர்கள் அப்புறப்படுத்தினர்




நெல்லை, மார்ச். 28

உலக வன நாள் தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் வன சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் அம்பாசமுத்திரம் புலிகள் காப்பக இணை இயக்குநரும், வன உயிரின காப்பாளருமான ஸ்ரீகாந்த் உத்தரவின் பெயரில் அம்பாசமுத்திரம் வனச்சரகர்கவின்தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (22.03.2026) அன்று மணிமுத்தாறு அணை வன பேச்சி அம்மன் கோயிலை சுற்றியுள்ள பகுதிகளில் வனவிலங்கு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அறக்கட்டளை சார்பில் திருநெல்வேலி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்ஜாபர்தலைமையிலான தன்னார்வலர்கள் வனப் பகுதியில் தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இதில் மது பிரியர்கள் விட்டுச்சென்ற 540 கிலோ காலி மது பாட்டில்கள் மற்றும் பொதுமக்கள் விட்டுச் சென்ற 260 கிலோ பிளாஸ்டிக் பொருட்களை ஒரே நாளில் கண்டெடுத்து அவற்றை அப்புறப்படுத்தினர். இந்தப் பணியின் போது குமரி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்டத்தை சேர்ந்த தன்னார்வலர்கள் பாபு, சண்முகம், மாகின், ஜேம்ஸ், மாலிக், சங்கர், அய்யனார், சரவணகார்த்திக், பிரதீப், ஜெயன், பிரின்ஸ் உட்பட்ட சரக வன ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# பனியன் தொழிலாளர்கள் 100% வாக்கு அளிக்க வேண்டும் விழிப்புணர்வு



திருப்பூர் மார்ச்28

திருப்பூர் பெருமாநல்லூர் சாலை. சந்தோஷ் பனியன் தொழிற்சாலையில் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு. வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் 23ஆம் தேதி தமிழகம் முழுவதும் நடைபெற உள்ளதால் அனைத்து பனியன் தொழிலாளர்களும் தங்களுடைய பணிகளை நிறுத்தம் செய்து 100% அனைத்து தொழிலாளர்களும் வாக்குகள் அளிக்க வேண்டும். என்று விழிப்புணர்வு பேரணி தொழிற்சாலை வளாகத்தில் நடைபெற்றது.

நிறுவனர் வினோத் குமார் மேலாளர் கோவிந்தராஜ். முன்னணியில் நடைபெற்றது..

வாக்காளர்களுக்கு. திருப்பூர் வருவாய் கோட்டாட்சியாளர் சிவப்பிரகாஷ். வட்டாட்சியாளர் கண்ணாமணி. துணை வட்டாட்சியாளர் அருள். நில அளவையாளர்கள். மற்றும் அரசு துறையை சேர்ந்த அதிகாரிகள் தொழிலாளர்களிடம் 100% வாக்குகள் அவசியம் திருப்பூர் வடக்கு பகுதிகளில் சென்ற ஆண்டு மிகவும் குறைவான வாக்குகள் பதிவாக உள்ளதால் இம்முறை அனைத்து தொழிலாளர்களும் தங்களுடைய பணிகளை நிறுத்தம் செய்து வாக்குகள் அளிக்க வேண்டும் என்று தொழிலாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்..




# ஊத்தங்கரையில் தேர்தல் விழிப்புணர்வு பேரணி

## சிவன் வேடமணிந்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு

கிருஷ்ணகிரி, மார்ச். 28

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை (தனி) சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி வாக்காளர் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

இந்த பேரணியை ஊத்தங்கரை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலருமான சிவகுமார் மற்றும் ஊத்தங்கரை வட்டாட்சியரும், தேர்தல் உதவி அலுவலருமான ராஜலட்சுமி தலைமையில் நடத்தினர். 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்வதற்கும், வாக்களிப்பதன் அவசியத்தை பொதுமக்களிடையே வலியுறுத்துவதற்கும் இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் நாடகக் கலைஞர்கள் சிவன் உள்ளிட்ட பல்வேறு கடவுள் மற்றும் புராண வேடமணிந்து கலை நிகழ்ச்சிகள் மூலம் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் தொடங்கிய பேரணி, நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வாசகங்கள்கொண்ட பேனர்கள்ஏந்தியும், துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் சென்றனர். இறுதியாக, பேரணி ஊத்தங்கரை பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது

# திருநங்கையர்களுடன் தேர்தல் விழிப்புணர்வு; கலெக்டர் பங்கேற்பு



கன்னியாகுமரி, மார்ச்.28

வெள்ளமடம் அருகே சகாயநகர் குடியிருப்பு பகுதி திருநங்கைகளிடையே வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு பொங்கல் வைக்கப்பட்டது.இந்த நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் அழகு மீனா துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பானைக்குப் பொட்டு வைத்து, அரிசியிட்டு பொங்கல் பொங்கி வரும் வேளையில், அங்கிருந்த திருநங்கைகளுடன் இணைந்து "பொங்கலோ பொங்கல் தேர்தல் பொங்கல்" என முழக்கமிட்டு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

அதனைத்தொடர்ந்து, தேர்தலில் திருநங்கைகளின் பங்களிப்பை உறுதி செய்யும் வகையில் கையெழுத்து இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் திருநங்கைகள் அனைவரும் ஆர்வத்துடன் தங்களது கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர். தொடர்ந்து அனைவரும் வாக்காளர் உறுதிமொழியியை ஏற்றனர்.

தொடர்ந்து கலெக்டர் கூறுகையில்: சமூகத்தில் திருநங்கைகள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். ஜனநாயகத்தின் மிகப்பெரிய கடமையான வாக்களிப்பதில் அவர்களின் முழுமையாகப் பங்கேற்க வேண்டும். ஒருவரும் விடுபடாமல் தேர்தல் நாளன்று தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதே இந்த விழிப்புணர்வின் நோக்கம். நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் 102 திருநங்கையர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூறினார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தேர்தல் விழிப்புணர்வு கண்காணிப்பு அலுவலர் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் பத்ஹூ முகம்மது நசீர், மாவட்ட சமூக நல அலுவலர் விஜயமீனா, துறை அலுவலர்கள், திருநங்கையர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

குமரி கடற்கரை கிராமத்தில்

# மகளிர் சுயஉதவிக்குழுவினர் தேர்தல் விழிப்புணர்வு




கன்னியாகுமரி, மார்ச்.28

சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தின் கீழ் பல்வேறு நிகழ்ச்சிகள் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கேசவன் புத்தன்துறை கடற்கரை கிராமத்தில் மகளிர் சுயஉதவிக்குழுவினர் 100 சதவீத வாக்குப் பதிவை வலியுறுத்தி கடல் மணற்சிற்பம் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

வாக்காளர்கள் அனைவரும் எவ்வித தூண்டுதலுக்கும் இடமளிக்காமல், நேர்மையாகவும், கடமையுணர்வோடும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வாக்காளர்கள் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

தேர்தல் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தில் பொதுமக்கள் கையெழுத்திட்டனர். மேலும் அமைக்கப்பட்ட செல்பி பாயின்ட்டில் வாக்காளர்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். கடலோரப் பகுதியான கேசவன்புத்தன்துறையில் உள்ள மீனவ மக்களிடமும், கடைவீதிகளிலும் தேர்தல் நாள் மற்றும் வாக்குப்பதிவின் முக்கியத்துவம் குறித்த துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

திருச்சி ஏர்போர்ட்

# உள்நாட்டு பயணிகள் வருகை 52% அதிகரிப்பு



திருச்சி, மார்ச். 28

திருச்சி விமான நிலையத்தில் இருந்து இந்திய நாட்டின் பல்வேறு நகரங்களுக்கும் நிகழாண்டில் இதுவரை 9,846 விமான சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் திருச்சி விமான நிலையத்துக்கு 8 லட்சத்து 51,212 பயணிகள் வந்து சென்றுள்ளனர். இது கடந்த 202425 ஆம் ஆண்டை விட விமான சேவையில் 21 சதவீதமும் பயணிகள் வருகையில் 52 சதவரீதமும் அதிகமாகும் என விமான நிலைய இயக்குனர் ராஜு தெரிவித்துள்ளார்

திருவரம்பூர் அருகே

# அடையாளம் தெரியாத ஆண் சடலம் மீட்பு

திருச்சி, மார்ச். 28

திருச்சி திருவரம்பூர் சாந்தி தியேட்டர் அருகே அடையாளம் தெரியாத 45 வயது மதிக்கத்தக்க ஆண் சடலம் கிடப்பதாக கிராம நிர்வாக அதிகாரி சத்தியமூர்த்தி தகவல் அளித்தார்.

தகவலின்பேரில்சம்பவ இடத்திற்கு சென்றதிருவரம்பூர் போலீசார், அடையாளம் தெரியாத நபரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். உயிரிழந்த நபர் யார் என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி

# அதிக தூக்க மாத்திரை உட்கொண்ட மூதாட்டி பலி

திருச்சி, மார்ச். 28

திருச்சி உய்யக்கொண்டான் திருமலை எம்எம் நகரைச் சேர்ந்த 21 வயது மனநலம் பாதிக்கப்பட்ட மூதாட்டி நிர்மலா, கடந்த 13ஆம் தேதி அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரைகளை உட்கொண்டு மயங்கிய நிலையில் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி இன்று காலை அவர் உயிரிழந்தார். இது குறித்து அரசு மருத்துவமனை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்

இந்திய ஜனநாயக கட்சி

# பல்லாவரம், குன்னம் தொகுதியில் போட்டி



சென்னை, மார்ச் 28,

தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய ஜனநாயக கட்சியின் வேட்பாளர் பட்டியல் அதன் நிறுவனர் தலைவர் பாரிவேந்தர் வெளியிட்டார் .

அதில்பல்லாவரம்சட்டமன்ற தொகுதியில் வழக்கறிஞர் வி. வெங்கடேசன், குன்னம் தொகுதியில் சரண்யா அன்பழகன் ஆகிய இருவரும் போட்டியிடுகின்றனர் . இவர்கள் இருவரும் அதிமுக வின் சின்னமான இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவார்கள் என்று இந்திய ஜனநாயக கட்சியின் நிறுவனர் அறிவித்தார். இந்திய ஜனநாயக கட்சியின் தலைவர் ரவிபச்சமுத்து, வேட்பாளர்கள் வெங்கடேசன், சரண்யா ஆகியோர் உடனிருந்தனர்.

# லால்குடி தொகுதியில் லீமா ரோஸ் போட்டி



திருச்சி, மார்ச். 28

ஐஜேகேகட்சியில்இருந்துவிலகிசமீபத்தில்அதிமுகவில் இணைந்த லீமா ரோஸ் லால்குடி தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். திமுகவின் கோட்டையாக கருதப்படும் திருச்சி மாவட்டத்தில் உள்ள லால்குடி தொகுதியில் இவர் வெற்றி பெறுவாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



திருச்சி மேல கல்கண்டார் கோட்டை பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் விக்னேஷ், விஜயை பார்க்கச் சென்றபோது விபத்தில் சிக்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.சிகிச்சைபலனின்றிஅவர்உயிரிழந்தார்.இதைஅடுத்து,அவரதுகுடும்பத்தினரை அமைச்சர் அன்பில் மகேஷ் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

### ஊர் கூடி தேர் இழுத்தால் நகராத தேரும் நகரும் அமைப்பினர்கள்சார்பாக

# அகல் விளக்கு ஏந்தி கூட்டு பிரார்த்தனை



கோவை மார்ச்:28

கோவை மாவட்டம் சௌரிபாளையம் சாலையில் மேற்கத்திய வளைகுடா நாடுகளில் சமீப காலமாக நடைபெறும் போர்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு பேச்சு வார்த்தையின் மூலம் சமூக உடன்படிக்கை ஏற்பட வேண்டும் எனவும் உலக மக்கள் நலனுக்காகவும் உலக மக்கள் அச்சத்தை போக்கவும் உலக மக்கள் வாழ்வாதாரம் பாதிக்காமல் இருப்பதற்கும் உலக நாடுகள் அமைதிக்காகவும் சௌரிபாளையம் ஊர் கூடி தேர் இழுத்தால் நகராத தேரும் நகரும் அமைப்பினர்கள் சார்பாக அகல் விளக்கு ஏந்தி உலக மக்கள் அனைவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைந்திட வேண்டும் என சர்வ மத கூட்டு பிரார்த்தனை நடைபெற்ற நிகழ்வுகளில் அரோமா நந்தகோபால்,லட்சுமி பேக்கரி சம்பத்குமார்,காசிராஜன்,கார்த்திகேயன்,பிரான்சிஸ் மாரியப்பன்,வெங்கடேஷ்,ஜெயராம்,வரதராஜ்,கண்ணதாசன்,சாமியப்பன், பன்னீர்செல்வம்,விஸ்வநாதன்,ராஜேந்திரன்,வின்சென்ட் சஞ்சய் ஆகியோர் கலந்து கொண்டனர்.நிகழ்வில்விளிம்புநிலையில் உள்ளவர்களுக்கு ஆடைகளும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக மன நோயால் பாதிக்கப்பட்ட கமல்ராஜ் என்கின்ற மருத்துவ பயனாளிக்கு மாதாமாதம் வழங்குகின்ற மருந்து பொருட்களும் வழங்கப்பட்டன.



தமிழகத்தில் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, துறையூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துறையூர் நகர பேருந்து நிலையம் அருகே சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில் 200க்கும் மேற்பட்ட கல்லூரிமாணவிகள்பங்கேற்றவிழிப்புணர்வுபேரணிநடைபெற்றது.இதில்,மாணவிகள் தேர்தலின் முக்கியத்துவம் மற்றும் வாக்களிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

### தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில்

# 5 வேட்பாளர்களும் பாஜகவின் தாமரை சின்னத்தில் போட்டியிடுவார்கள்

## ஜி.கே.வாசன் அறிவிப்பு



சென்னை, மார்ச் 28

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு தேசிய ஜனநாயக கூட்டணியில் 5 சட்ட மன்றத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்தொகுதிகளில் வேட்பாளர்கள் பெயர்கள் அறிவிப்பு மற்றும் தேர்தல் அறிக்கை வெளியீட்டிற்கான செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. அப்போது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் வேட்பாளர் பெயர்களை வெளியிட்டார். அதில் ராணிப்பேட்டை தொகுதியில் பி. எம். கார்த்திகேயன், ஈரோடு மேற்கு தொகுதியில்எம்.யுவராஜா,ஒட்டன்சத்திரம் தொகுதியில்விடியல்சேகர்,கும்பகோணம் தொகுதியில் எம்.கே.ஆர் அசோக்குமார் கிள்ளியூர் நிவின் சைமன் ஆகியோர் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் தாமரை சின்னத்தில் போட்டியிடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது

### நாகர்கோவில்

# முன்னாள் அதிமுக எம்எல்ஏ உட்பட 15 பேர் மீது வழக்கு பதிவு

நாகர்கோவில், மார்ச். 28

நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் அதிமுகவுக்கு கன்னியாகுமரி தொகுதி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.மற்ற5தொகுதிகளில்4தொகுதிகளில் பாரதிய ஜனதா கட்சியும், ஒரு தொகுதியில் தாமரை சின்னத்தில் தாமாக கட்சியும் போட்டியிடுகிறது.

ஆறு தொகுதிகளில் மாவட்டத்தில் ஒரே ஒரு தொகுதியை மட்டும் அதிமுக பெற்றுள்ளதால் அக்கட்சியின் மாவட்ட செயலாளரான தளவாய் சுந்தரம் எம்எல்ஏவுக்கு எதிராக முன்னாள் நாகர்கோவில் எம்எல்ஏ நாஞ்சில் முருகேசன் போர்க்கொடி தூக்கி உள்ளார். சுயநலம் கருதி ஒரு தொகுதியை மட்டும் தளவாய் சுந்தரம் பெற்றுக் கொண்டுள்ளார் என புகார் எழுந்துள்ளது.

இந்த நிலையில் நாகர்கோவில் வேப்ப மூடு சந்திப்பு பகுதியில் உள்ள காமராஜர் சிலையின் மேல் பகுதியில் தளவாய் சுந்தரத்திற்கு எதிராக போஸ்டர் தொங்க விடப்பட்டிருந்தது. அதில் நாடார் சமூகத்தை ஒதுக்கும் தளவாய் சுந்தரத்தை வன்மையாக கண்டிக்கிறோம் என எழுதப்பட்டிருந்தது.

இந்த இதற்கிடையில் நேற்று முன்தினம் வடசேரி எம்ஜிஆர் சிலைமுன் தளவாய் சுந்தரத்தின் படத்தைக் கிழித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக அதிமுக வழக்கறிஞர் அணி மாவட்ட இணை செயலாளர் லட்சுமி நாராயணன் என்பவர் வடசேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதில் முன்னாள் எம்எல்ஏ நாஞ்சில் முருகேசன் தூண்டுதலின் பேரில் சிலர் வடசேரி எம்ஜிஆர் சிலை முன்பு வாகனத்தை மறித்து, கும்பலாக தளவாய் சுந்தரம் படத்தை கிழித்து பொதுத் தொல்லை கொடுத்ததாக கூறியுள்ளார். இந்த புகாரின் பேரில் நாஞ்சில் முருகேசன் உட்பட 15 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

### கருங்கல் அருகே

# மாயமான பள்ளி மாணவன் மீட்பு

கருங்கல், மார்ச்.28

கருங்கல் அருகே திக்கணங்கோடு பகுதியை சேர்ந்தவர் கிறிஸ்டியன் பாபு (48). அரசு பஸ் டிரைவராக பணியாற்றி வருகிறார். இவரது மனைவி நர்சாக உள்ளார். இவர்களது 14 வயது மகன் மைலோடு பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வருகிறார். நேற்று முன்தினம் இரவு உணவு சாப்பிட்டு விட்டு வீட்டில் உள்ள அறையில் தூங்குவதற்காக மாணவன் சென்றுள்ளார்.

அடுத்த நாள் காலையில் மகனை தாயார் எழுப்ப அறைக்கு வந்த போது அவனை காணவில்லை. பல இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. கண்காணிப்பு கேமராக்களை பார்த்தபோது மாணவன் கப்பியறை, புங்கறை போன்ற பகுதி வழியாக ஓடிச் செல்வதும் பின்னால் நாய்கள் துரத்தியதையடுத்து கல் வீசி தாக்கி விட்டு செல்வதும் சிசிடிவியில் பதிவாகி இருந்தது.

இது குறித்து கிறிஸ்டியன் பாபு கருங்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான மாணவனை தேடி வந்தனர்.

இந்த நிலையில் சிறுவன் மாயமான செய்தி வாட்ஸ் அப்பில் அப்பகுதி மக்களிடைய வேகமாக பரவியுள்ளது. நேற்று முன்தினம் இரவிபுதூர்கடை பகுதியில் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் மாஸ்க் அணிந்து சென்ற மாணவன் என்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறியுள்ளார். வாட்ஸ் அப்பில் பார்த்த சிறுவன் போல் இருக்கிறது என சந்தேகமடைந்த பாதிரியார் மாஸ்கை கழட்ட கூறியுள்ளார். உடனே ஓட்டம்படித்த சிறுவனை அக்கம் பக்கத்தினர் மடக்கி பிடித்து பாதிரியாரிடம் அழைத்து வந்தனர். பாதிரியார் சிறுவனின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்தார். அங்கு வந்த பெற்றோர் சிறுவனிடம் எங்கு சென்றாய் ? என கேட்டதற்கு எனக்கு ஒன்றுமே ஞாபகம் இல்லை என அழுதுள்ளார். பின்னர் அவரை வீட்டிற்கு அழைத்து சென்று போலீஸ் நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

# நடைபயிற்சி சென்ற பெண்களிடம் நகை பறிப்பு; போலீஸ் விசாரணை

கன்னியாகுமரி, மார்ச்.28

கன்னியாகுமரி அருகே உள்ள மகாதானபுரத்தை சேர்ந்தவர் சுப்பிரமணியன். இவரது மனைவி மங்களம் (56). இவரும், இவரது பக்கத்து வீட்டை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரது மனைவி ராஜலட்சுமி 65) என்பவரும் தினமும் மாலை நடைபயிற்சி செல்வது வழக்கம்.

நேற்று மாலை வழக்கம்போல் மகாதானபுரம் அக்ரகாரம் தெருவில் இருந்து நரிக்குளம் செல்லும் ரோட்டில் சென்று கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த கார் இவர்களின் பின்னால் வந்து திடீரென நிறுத்தியதும் பின் இருக்கையில் இருந்து 2 நபர்கள் இறங்கி வந்தனர். அவர்களில் ஒருவர் மங்களத்தின் கழுத்தில் கிடந்த சங்கிலியை பறித்தார். மற்றொருவர் ராஜலட்சுமி கழுத்தில் தங்கச் சங்கிலியை பறித்தார். இதையடுத்து அவர்கள் 2 பேரும் கூச்சலிட்டனர். நகையை பறித்த இருவரும் காரில் ஏறி தப்பி சென்று விட்டனர். கொள்ளையடிக்கப்பட்ட நகை மங்களத்தின் கழுத்தில் கிடந்த 2 தங்க சங்கிலிகள் 7 பவுன் எடை கொண்டதும், ராஜலட்சுமி கழுத்தில் கிடந்த சங்கிலி 1 1/2 பவுன் எடை கொண்டது ஆகும். இது குறித்து மங்களம் கன்னியாகுமரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து அந்த மர்ம நபர்களையும், காரையும், போலீசார் தேடி வருகிறார்கள். இந்த துணிகர கொள்ளை சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உங்கரானஹள்ளியில் ஸ்ரீ ராமர் நவமியை முன்னிட்டு சீதாராமன் திருக்கல்யாணம் விழா.



தருமபுரி மார்ச் 28

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் உங்கரானஹள்ளி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராமர் திருக்கோவிலில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு சுவாமிக்கு அதிகாலையில் சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது.இதைத்தொடர்ந்துசீதாராமர்திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாக நடைபெற்றது . இந்த விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை வழிபட்டனர். இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். திருக்கோவில் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

### ஈரோடு

# நந்தா பொறியியல் கல்லூரி ஆண்டு விழா




ஈரோடு, மார்ச் .28

வெள்ளி விழா கொண்டாடி வரும் நந்தா பொறியியல் கல்லூரியில் "ரிதம் 26' ஆண்டு விழாவும் மாணவர்களின் பதவியேற்பு விழாவும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்றது . நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வா ரகுபதி ஆண்டறிக்கை வாசித்தார்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான நந்த குமார் பிரதீப், திருமூர்த்தி, நந்தா தொழில் நுட்பக் கல்லூரியின் முதல்வர் நந்தகோபால் மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி த வேலுசாமி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

இதனைத் தொடர்ந்த நடந்து முடிந்த பருவத்தேர்வுகள் மற்றும் பல்வேறு பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், தனக்கு ஒதுக்கப்பட்ட பாடங்களில் நூறு சதவீதம் தேர்ச்சி மற்றும் ஆராய்ச்சி துறைகளில் சாதனைப் படைத்த ஆசிரியர்களுக்கும் நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் சண்முகன் கேடயங்கள் சான்றிதழ்கள் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கி கௌரவித்தார்.

அடுத்த கல்வியாண்டிற்கான செயலர்கள், துணை செயலர்கள் உட்பட அனைத்து துறைச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான பதவியேற்புவிழாவில்அசோக்லைலாண்ட் நிறுவனத்தின் மூத்த துணை தலைமையதிகாரி முனைவர் சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராககலந்து கொண்டார். மேலும், அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, மேடைக்கு வெளியே நடத்தப்பட்ட தமிழ் கட்டுரை மற்றும் வாசிப்பு. கழிவுகளிலிருந்து சிறந்த பொருட்களை உருவாக்குதல், சிறந்த குறும் படங்கள் மற்றும் புகைப்படங்கள் எடுத்தல் போன்ற உடனடி கலைமிக்க போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், மேடையில் கண்கவர் கலை நிகழ்ச்சியான நடனங்கள், பாடல்கள் மற்றும் இசையிலும் தங்களது திறன்களை வெளிப்படுத்தி முதல் மூன்று இடங்களை தக்க வைத்துக் கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. கலைத்திருவிழாவின் போது மேடையில் நடைபெற்ற மாணவ, மாணவியர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த இசை, பாடல்கள் மற்றும் நடனங்கள் அரங்கேற்றப்பட்டன.

# அதிமுக தொகுதிகளை பா ஜ கேட்டு வாங்கியது என்பது அவதூறு பிரச்சாரம்

## நயினார் நாகேந்திரன் பேட்டி



கன்னியாகுமரி, மார்ச்.28

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.அதனைத்தொடர்ந்துசெய்தியாளர்களை சந்தித்தார் அப்போது கூறுகையில்:

போர் சூழல் நேரத்திலும் கூட மத்திய அரசு பெட்ரோல் டீசல் மீதான கலால் வரியை ரத்து செய்துள்ளது. இதே போல் தமிழக அரசும் கலால் வரியை ரத்து செய்ய வேண்டும். பெண்களை இழிவாக பேசும் திமுகவினர் மீது தமிழக முதல்வர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மதிப்பிற்குரிய அண்ணாமலை தேர்தலில் நிற்பது தொடர்பாக தலைமை முடிவு செய்யும் என்றார்.

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வேறு ஏதும் கட்சிகள் வர வாய்ப்புள்ளதா என்ற கேள்விக்கு, " தற்போது கருத்து கூற முடியாது " எனவும், தேசிய ஜனநாயகக் கூட்டணி கண்டிப்பாக வெற்றி பெறும் என தேர்தல் கருத்துக்கணிப்புகள் வெளிவருகிறது அதன் அடிப்படையில் கண்டிப்பாக வெற்றி பெறுவோம். என கூறினார்.

தேர்தலில் தொகுதி ஒதுக்கீடு என்பது பரஸ்பரம் பேசி முடிவு செய்யப்பட்ட ஒன்று , சில இடங்களில் அதிமுகவுக்கு அதிகமாக கொடுத்துள்ளோம். சில இடங்களில் எங்களுக்கு அதிகமாக கிடைத்துள்ளது.

அதிமுக தொகுதிகளை பாஜக பெற்றுள்ளது என்பது அவதூறு பிரச்சாரம். வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம்.கன்னியாகுமரிமாவட்டத்தில் மட்டும் தொகுதிகளை கேட்டு வாங்கி விட்டோம் என கூறுவது சரி இல்லை.

யார் வெற்றி பெற்றாலும் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தான். தற்போது இருக்கும் முதல்வர் மக்களை பற்றி கவலை கொள்ளாமல் 5 ஆண்டுகளாக குடும்ப பிரச்சினையை மட்டுமே பார்த்துக் கொண்டு வந்தார். ஆட்சி மாற்றம் வேண்டும் என்பதே அடிப்படை. நான் சாத்தூர் தொகுதியில் போட்டியிடுகிறேன் எனவும் தெரிவித்தார்.



தமிழ்நாடுசட்டமன்றபொதுத்தேர்தல்2026நடைபெறுவதைமுன்னிட்டு,கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, எலத்தகிரி கொன்சேகா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இளம் வாக்காளர்கள் தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் , உரையாற்றினார். உடன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் .சின்னசாமி, தனி வட்டாட்சியர் விழிப்புணர்வு அலுவலர் .மோகன்தாஸ்கொன்சேகா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயலாளர். நோயல் ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



வாணியம்பாடி தொகுதியில் இரண்டாவது முறையாக அதிமுக வேட்பாளராக கோ. செந்தில்குமார் அறிவிக்கப்பட்டுள்ளார்.

# ஈரோடு அரசு ஆஸ்பத்திரியில் கர்ப்பபை நோய்களை கண்டறிய நவீன கருவி

ஈரோடு மார்ச் 28

பெண்களுக்கு கர்ப்பப பையில் ஏற்படும் பிரச்சினைகள் மிகப்பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன .இது போன்ற பிரச்சினைகளுக்காக வரும் பெண்களுக்கு அரசு ஆஸ்பத்திரிகளில் உயர் தர சிகிச்சை அளிப்பதில் பல்வேறு சிக்கல்கள் இருந்தன.

இந்த நிலையில் ஈரோடு அரசு ஆஸ்பத்திரியில் கர்ப்பப்பை சிகிச்சைக்காக நவீன ஹிஸ்ட்ரோஸ்கோப்பி என்ற நவீன கருவி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. சென்னையை சேர்ந்த ரோட்டரி அமைப்பு ரூ.15 லட்சத்து 8 ஆயிரத்து 678 மதிப்பு மிக்க இந்த நவீன கருவியை ஈரோடு அரசு ஆஸ்பத்திரிக்கு வழங்கி உள்ளது. இந்த கருவி மூலம் முதல் சிகிச்சையை ஈரோடு மாவட்ட நலப் பணிகள் இணை இயக்குநர் ஜெயந்தி ஈரோடு அரசு ஆஸ்பத்திரி சூப்பிரண்டு வெங்கடேஷ் உறைவிட மருத்துவ அதிகாரி சசிரேகா ஆகியோர் முன்னிலையில் சிறப்பு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர்.

இதன்மூலம் ஒரே நாளில் 8 பெண்க ளுக்கு வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த நவீன கருவி மூலம் கர்ப்பபை திசுக்களில் கேமரா மூலம் துல்லியமான பரிசோனை செய்ய முடியும்.

குழந்தை பேறு இல்லாத பெண்களுக்கு உட்சுவர் கருக்குழாய் அடைப்பு, நீர்க்கட்டி உள்ளிட்ட பிரச்சினைகளை கண்டறிந்து, ரத்த இழப்பு இல் லாத அறுவை சிகிச்சை செய்ய முடியும்.

இந்த நவீன கருவி மூலம் சிகிச்சை அளிப்பதால் ஆஸ் பத்திரியில் தங்கும் நாட்கள் குறைவதுடன், அறுவை சிகிச்சை தழும்புகளும் இருக்காது. இந்த சிகிச்சையை ஈரோடு மக்கள் பயன்படுத்திக் கொள்ளும்படி நலப்பணிகளின் இணை இயக்குநர் ஜெயந்தி கேட்டு கொண்டு உள்ளார் .


## ஆவணம் காணவில்லை

எனது கட்சிக்காரர் FED BANK FINANCIAL SERVICES LIMITED அலுவலகம் .18/2 , பிளாக் எண்.10, தெற்கு ரத வீதி, டவுன், திருநெல்வேலி 627006 தமிழ்நாடு என்ற முகவரியில் உள்ளது. திரு. யோகராஜ் த/பெ தொப்புலான் D.NO 9/92 காந்தி நகர்,கீழபாப்பாக்குடி, பாப்பாகுடி, திருநெல்வேலி627602 , பாப்பாகுடி கிராமம் , திருநெல்வேலி மாவட்டம் மேற்படி நிறுவனத்திடம் வீட்டுக்கடன் விண்ணப்பித்துள்ளார். இந்நிலையில் திரு. யோகராஜ் த/பெ தொப்புலான் அவருடைய அசல் தாய் பத்திரமான கிரைய பத்திரம் முக்கூடல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 528/2010ஆவண பதிவு செய்த நாள் 24/03/2010 கடந்த 14/05/2015 தேதியில் மாலை சுமார் 5.00 மணியளவில் திருநெல்வேலி பேருந்து நிலையத்திலிருந்து முக்கூடல் எடுத்து செல்லும்போது தொலைந்து விட்டது. பல இடங்களி'ல் தேடியும் கிடைக்கவில்லை.

எனவே பொதுமக்கள் மேற்படி ஆவணத்தை யாரிடமோ கிடைக்க பெற்றாலோ மற்றும் மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்றாலே 7 நாட்களுக்குள் எமது கீழ் கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்

S.SOUNDAPPAN B.A,B.L,C.D.T
D.NO.9A 1ST FLOOR NALLATHAMBI STREET PALAYAMKOTTAI
THIRUNELVELI 627002
CRN: CRR2403529

## காணவில்லை

நான் என்னுடைய நிலப்பத்திர ஆவணங்களுடன் ( (LAND DOCUMENT. SALE DEED, SHARE DOCUMENT, DEBIT CARD, CREDIT CARD, OFFICIAL DOCUMENT, ANY BONDS, OTHER CERTIFICATE/DOCS) 13062018 அன்று 03:30 மணிக்கு வேர்கிளம்பி என்ற ஊரிலிருந்து சித்திரங்கோடு என்ற ஊருக்கு நான் செல்லும் வழியில் தொலைந்து விட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்டமுகவரிக்குஅனுப்பிதரும்படிகேட்டுக்கொள்கிறேன்.

RAMESH PAULKUMAR P 40
S/O PAULAS
COMPLAINANT ADDRESS,
877, KOLIYAN KOATTU VILAI, CHENKODY,
CODE 629177 VAKUMARI, TAMILNADU
COMPLAINT REFERENCE NUMBER
OLC5892600005719

## ஆவணம் காணவில்லை

என்னுடைய சொத்து பத்திரம்(நில ஆவணம்,கிரயப் பத்திரம் / விற்பனைப் பத்திரம்,பங்கு ஆவணம் பற்று அட்டை, கடன் அட்டை, அதிகாரப்பூர்வ ஆவணம், பிணைப்பத்திரங்கள்,பிற சான்றிதழ்கள்/ஆவணங்கள் போன்றவைகளுடன் 28122022 அன்று 11:21 மணிக்கு ராஜாக்கமங்கலத்தில் இருந்து நாகர்கோவிலுக்கு பேருந்தில் செல்லும் வழியில் தொலைந்து விட்டது. இதனை கண்டெடுப்பவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
KAVIN K 32 S/O KANNAN
9/638, MELA SANKARAN KUZHI,
SANTHAPURAM, VEMPANOOR,
AGASTEESWARAM, KANNIYAKUMARI, TAMILNADU629201
COMPLAINT REFERENCE NUMBER
OLC5892600006178


### குப்பூரில் உள்ள

# ஸ்ரீ பஞ்சமலை ஆஞ்சநேயர் திருக்கோவில் ஸ்ரீ ராம நவமி விழா





தருமபுரி மார்ச் 28

தருமபுரி மாவட்டம் குப்பூர் ஊராட்சியில் அன்னசாகரத்தான் கொட்டாயில் உள்ள ஸ்ரீ பஞ்ச மலை ஆஞ்சநேயர் திருக்கோவிலில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு ஸ்ரீ சீதா ராமர் சுவாமிக்கு காலை முதல் சிறப்பு அபிஷேகங்கள் , ஆராதனைகள் நடைபெற்றது. இவ்விழாவில் அருகில் உள்ள கிராம மக்கள் கலந்து கொண்டு ஸ்ரீ சீதாராமர் மற்றும் ஆஞ்சநேயரை வழிபட்டனர். இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். திருக்கோவில் நிர்வாக சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.



திருப்பத்தூர்மாவட்டம்வாணியம்பாடிஅருகேவணிகசிலிண்டர்கள்தட்டுப்பாட்டால் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஹோட்டல்கள் ஒரு வார காலத்திற்கு மூடப்படுவதாக அறிவிப்பு.



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு கோவில்பட்டிசட்டமன்றதொகுதியில்உள்ளவாக்குச்சாவடிகளில்பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ரேண்டம் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் தகுந்த காவல் கண்காணிப்புடன் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், நேரில் சென்று பார்வையிட்டார்.





தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026, வருகின்ற 23.04.2026 அன்று நடைபெற உள்ளதை முன்னிட்டு, 100 சதவீதம் வாக்கு பதிவினை வலியுறுத்தி தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் சாலை ஏ.வி.எம் கமலவேல் திருமண மண்டபம் அருகில் உள்ள லிட்டில் சிஸ்டர்ஸ் முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்கள் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட வருவாய் அலுவலர் மூ.குருச்சந்திரன் அவர்கள் தலைமையில் அனைவரும் எடுத்துக்கொண்டனர்.

# திருப்பூரில் உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட டிஷர்ட்டுகள் பறிமுதல் வணிகவரித்துறை நடவடிக்கை



திருப்பூர் வேலம்பாளையம் பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் சண்முகம் அவரது கம்பெனியில் பள்ளி குழந்தைகளுக்காக தயாரிக்கப்பட்ட யூனிபார்ம் மும்பைக்கு அனுப்புவதற்காக 1920 டி சர்ட்டுகள் வேனில் பார்சல் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது இந்த நிலையில் இந்த பொருட்களை உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்டதாக வணிகவரித் துறை அதிகாரிகள் சோதனையில் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர் அந்த டீசர்ட்டுகளுக்கு ரசித்து உள்ளிட்ட எந்த ஆவணங்களும் இல்லாததால் வணிகவரித் துறை அதிகாரிகளை பார்த்ததும் ஓட்டுநர் தப்பி ஓடியது தெரிய வந்தது வாகனத்தில் ஒன்பது பண்டல்கள் இருந்தது இதில் 1920 டி சர்ட்டுகள் இருந்தன இதன் மதிப்பு ரூபாய் 2 லட்சத்து 88 ஆயிரம் ஆகும் என்று அதிகாரிகள்தெரிவித்தனர்இந்தடீசர்ட்டுகளை திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகத்தில் வணிகவரி துறை அதிகாரிகள் ஒப்படைத்தனர் தேர்தல் விதிமுறை அமுலில் இருக்கும் பொழுது உரிய ஆவணங்கள் இன்றி பணத்தையோ பனியன்உள்ளிட்டபொருட்களையோ எடுத்துச் செல்லக்கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்து உள்ள நிலையில் இது போன்று தவறுதலாக எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் பணம் பறக்கும் படைகளால் பறிமுதல் செய்யப்படுகிறது பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு விழிப்புணர்வு வரவில்லையா என்று தெரியவில்லை என்று சமூக ஆர்வலர்கள் புலம்புகின்றனர்

# முட்டப்பதி அய்யா வைகுண்டசாமி கோவில் திருவிழா துவக்கம்



கன்னியாகுமரி, மார்ச்.28

கன்னியாகுமரி அருகே உள்ள முட்டப்பதி அய்யா வைகுண்டசாமி கோவிலில் பங்குனி தேரோட்ட திருவிழா நேற்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த திருவிழா அடுத்த மாதம் 6ஆம் தேதி வரை 11 நாட்கள் தொடர்ந்து நடைபெறுகிறது .

நேற்று அதிகாலை 5.30 மணிக்கு திருக்கொடியேற்றும் நிகழ்ச்சி நடந்தது. இதையொட்டி பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கொடி பட்டம் மேளதாளம் முழங்க பதியை சுற்றி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது பின்னர் மங்கள இசை சங்கு நாதம் முழங்க அய்யா அரகரா சிவ சிவா என்ற பக்தர்கள் கோஷம் எழுப்ப கொடி ஏற்றப்பட்டது.இதில் திரளான அய்யாவழி பக்தர்கள் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து முட்டப்பதி திருப்பாற்கடலில் அய்யாவழி பக்தர்கள் தீர்த்தமாடி பதமிடும் நிகழ்ச்சி நடந்தது. பின்னர் உச்சிப்படிப்பு அன்னதர்மம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இரவு 7.30 மணிக்கு அய்யா கருட வாகனத்தில் எழுந்தருளி கோவிலை சுற்றி மேளதாளங்கள் முழங்க பவனி வரும் நிகழ்ச்சி நடந்தது. 2ஆம் திருவிழாவான இன்று (சனிக் கிழமை) முதல் 7 ஆம் திருவிழாவான அடுத்த மாதம் 2ஆம் தேதி வரை தினமும் பணிவிடைகள் உச்சிப் படிப்பு தர்மங்கள் மற்றும் இரவு வாகன பவனி போன்றவை நடைபெறுகிறது. இன்றும் நாளையும் (சனி மற்றும் ஞாயிறு) கருட வாகனத்திலும் 4 மற்றும் 5ஆம் திருவிழா அன்று கருட வாகனத்திலும், 6ஆம் திருவிழா அன்று சர்ப்ப வாகனத்திலும், 7ஆம் திருவிழா அன்று கருட வாகனத்திலும் அய்யாபவனி வரும் நிகழ்ச்சியும் 8ஆம் திருவிழா அன்று முட்டப்பதி கடலில் கலி வேட்டை நிகழ்ச்சியும் நடக்கிறது. இதையொட்டி அன்று அதிகாலை 4 மணிக்கு பணிவிடையும் அதைத்தொடர்ந்து உகப்படிப்பும் பகல் 12 மணிக்கு உச்சிப்படிப்பும் பால் தர்மம் போன்றவை நடக்கிறது இரவு 7:00 மணிக்கு அய்யா வைகுண்டசாமி பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட குதிரை வாகனத்தில் எழுந்தருளி ஊர்வலமாக புறப்பட்டு ஒற்றையால்விளை மாதவபுரம் வழியாக மீண்டும் முட்டப்பதி வரை பவனி வந்து வடக்கு வாசலுக்கு எதிரே அமைந்துள்ள கடலில் கலிவேட்டையாடும் நிகழ்ச்சி நடக்கிறது. 9 மற்றும் 10 ஆம் திருவிழா அன்று இரவு 7.30 மணிக்கு சப்பர வாகனத்தில் எழுந்தருளி கோவிலை சுற்றி வரும் நிகழ்ச்சி நடக்கிறது. 11ஆம் திருவிழா அன்று பகல் 12 மணிக்கு தேரோட்ட நிகழ்ச்சி நடக்கிறது. மறுநாள் அதிகாலை 4:00 மணிக்கு திருக்கொடி இறக்கும் நிகழ்ச்சியும்,தான தர்மங்களும் நடக்கிறது. திருவிழாவுக்கான ஏற்பாடுகளை முட்டப்பதி மூத்த தர்மகர்த்தா மனோகரச் செல்வன் தர்மகர்த்தா கைலாஷ் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட

# காங்கிரஸ் கட்சியின் மாவட்ட நிர்வாகிகளில் அவசர ஆலோசனைக்கூட்டம்



கிருஷ்ணகிரி, மார்ச். 28

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளின் அவசர ஆலோசனைக்கூட்டம் நடைப்பெற்றது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடைப்பெற்ற இந்த அவசர ஆலோசனை கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி.ரகு தலைமையில் நடைப்பெற்ற இக்கூட்டத்திற்கு நகர தலைவர் லலித் ஆண்டனி முன்னிலை வகித்தார்.

மேலும் இந்தக் கூட்டத்திற்கு காங்கிரஸ் கட்சியின் மாநிலசெயற்குழு உறுப்பினர் அக கிருஷ்ணமூர்த்தி, மாநில பொதுசெயலாளர் ஏகம்பவாணன், முன்னாள் மாவட்டத்தலைவர்களான எல்.சுப்பிரமணியன், ராஜா குமாரவேல், ஜேசுதுரைராஜ், நாராயண மூர்த்தி, காசிலிங்கம்,சிறுபாண்மை பிரிவு தலைவர் ஜாவித்கான், முன்னாள் எஸ்.சி.எஸ்.டி. மாநில பொதுச்செயலாளர் அறுமுக சுப்பிரமணி, அகில இந்திய கமிட்டி உறுப்பினர் குமரேசன், சேலம் மண்டல ரயில்வே குழு உறுப்பினர் தளபதி ரகமத்துல்லா ஆகியோர் கூட்டத்தில் நிறைவேற்றப்ட உள்ள தீர்மானத்தை ஆதரித்து பேசினார்கள்.

இந்த கூட்டத்தினைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, ஒசூர், தளி, வேப்பனஹள்ளி, பர்கூர், ஊத்தங்கரை ஆகிய 6 தொகுதிகளில் எந்த தொகுதியாக இருந்தாலும் சீட் வழங்குவது கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த காங்கிரஸ் கட்சியினருக்கே சீட் வழங்க வேண்டும்.

வேறு மாவட்டமோ அல்லது வேறு மாநிலத்தில் இருந்து வேட்பாளர்களை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அறிவிக்கக்கூடாது மண்ணின்மைந்தர்யாகயாரக இருந்தாலும் அவர்களை வெற்றிப்பெச்செய்து எதிர்க்கட்சி தலைவர் திரு.ராகுல் காந்தியின் கரத்தினை வலுப்படுத்த பாடுப்படுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த அவசர ஆலோசனைக்கூட்டத்திற்கு வட்டாரத் தலைவர்களான, நஞ்சுண்டன், தனஞ்செயயன், நாராயண மூர்த்தி, சித்திக், அயோத்தி, நகர தலைவர்கள் ஸ்ரீராம், யுவராஜ், விஜயகுமார், இளைஞர் அணி தலைவர் சத்தியமூர்த்தி, நகர்மன்ற உறுப்பினர் வினாயகம், முன்னாள் நகர தலைவர்கள் வின்செண்ட்,ரமே ஷ்அர்னால்ட், டாக்டர் தகி, மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அப்சல், வாஜித் பாஷா, கமலகண்ணன், குட்டி, பாண்டுரங்கன், முன்னாள் ஊத்தங்கரை சேர்மன் பூபதி, முன்னாள் அரசம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், சக்கரவர்த்தி, இளைஞர் காங்கிரஸ் சத்திவேல, மாரியப்பன், மீனவரணி தலைவர் செல்வம், முனீர், உள்ளிட்ட பலர் ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

### வெங்கட்டம்பட்டியில் ஸ்ரீ ராமர் நவமியை முன்னிட்டு

# சீதாராமன் திருக்கல்யாணம் விழா



தருமபுரி மார்ச் 28

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் வெங்கட்டம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராமர் திருக்கோவிலில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு சுவாமிக்கு அதிகாலையில் சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து சீதா ராமர் திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாக நடைபெற்றது . இந்த விழாவில் திரளான பக்தர்கள்கலந்துகொண்டு சுவாமியை வழிபட்டனர். இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர். திருக்கோவில் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.